இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித் துறை

விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் - 2024/2025

இறுதிப் பரீட்சை

**SNP**- 8340/8530- விசேட தேவைகள்சார் கல்வி உளவியல்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 19.07.2025 நேரம் : மு.ப.09.30- பி.ப.12.30

**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.**

பகுதி -1

1. விசேட தேவைகள் கல்வி ஆசிரியருக்கு அவரது தொழில்வாண்மை விருத்திக்கு கல்வி உளவியலின் முக்கியத்துவங்கள் **ஐந்தினைக்** (05) குறிப்பிடுக.
2. விருத்தி உளவியலாளர்கள் பின்பற்றும் விருத்தியின் முக்கிய கட்டங்களை சுருக்கமாக விளக்குக.
3. குழந்தை ஆய்வு முறையாக நேர்காணல் முறையின் **இரண்டு** (02) பலங்கள் மற்றும் **இரண்டு** (02) பலவீனங்களைக் குறிப்பிடுக.
4. விசேட கல்விப் பிரிவில் ஒரு ஆசிரியருக்கு 'முக்கியமான நிலைகள்' (Critical Stages) என்ற எண்ணக்கரு எவ்வாறு முக்கியமானது என்பதை **இரண்டு** (02) எடுத்துக்காட்டுகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
5. விசேட கல்வித் தேவைகள் உள்ள குழந்தைகளின் நினைவாற்றலை மேம்படுத்தப் பயன்படுத்தக்கூடிய ஐந்து (05) நுட்பங்களைப் பட்டியலிடுக.
6. விசேட கல்வித் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு பயனுள்ள கற்றல் அனுபவங்களை வழங்க நடத்தைவாத கற்றல் கோட்பாடுகளின் தத்துவார்த்த யோசனைகளை எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள் என்பதை சுருக்கமாக விவரிக்க.
7. விசேட கல்வித் தேவைகள் உள்ள குழந்தைகளின் ஆளுமை விருத்தியைப் பாதிக்கும் **மூன்று** (03) காரணிகளைக் விளக்குக.
8. விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட குழந்தைகளின் மனவெழுச்சி விருத்தியை உள்ளடங்கல் வகுப்பறையில் எவ்வாறு எளிதாக்கலாம் என்பதை சுருக்கமாக ஆராய்க.

**(05x08=** 40 புள்ளிகள்)

9.

i. விசேட தேவைகளைக் கொண்ட கல்வித் துறையில் ஒரு கல்வியாளருக்கு கற்றல் கோட்பாடுகளைக் கற்பதன் முக்கியத்தை **இரண்டு (02)** காரணங்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. ஒரு கற்றல் கோட்பாட்டைத் தேர்ந்தெடுத்து அதன் அடிப்படைக் கொள்கைகளை விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட குழந்தைகளின் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறைக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பரீட்சிக்க.

(06 புள்ளிகள்)

iii. கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறைகளில் அக் கொள்கைகளைப் பயன்படுத்தும் போது நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய **மூன்று (03)** சவால்களை விவரிக்க. அந்த சவால்களைச் சமாளிக்க **மூன்று (03)** பரிந்துரைகளை விவரிக்க.

(10 புள்ளிகள்)

10.

i. பரிசோதனை பிள்ளை ஆய்வு முறைகளுக்கும் பரிசோதனை அல்லாத பிள்ளை ஆய்வு முறைகளுக்கும் இடையிலான மூன்று (03) வேறுபாடுகளை விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. நடத்தை பிரச்சினைகள் உள்ள ஆரம்ப வகுப்பில் உள்ள ஒரு குழந்தையை ஆய்வு செய்ய பொருத்தமான குழந்தை ஆய்வு முறையைத் தேர்ந்தெடுத்து, அந்த முறையைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணங்களை வழங்கவும்.

(06 புள்ளிகள்)

iii. தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தை ஆய்வு முறையில் இருந்து நம்பகமான மற்றும் தகுதியான தரவைச் சேகரிக்க நீங்கள் பயன்படுத்தும் நடைமுறையைப் பற்றி ஆராய்க

(10 புள்ளிகள்)

11.

i. 'சமநிலை ஆளுமை' என்ற சொல்லை விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. பிராய்டின் உளப் பகுப்பாய்வுக் கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளின்படி ஒரு தனிநபரின் ஆளுமை எவ்வாறு உருவாகிறது என்பதைப் பற்றி ஆராய்க.

(06 புள்ளிகள்)

iii. விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட குழந்தைகளின் ஆளுமை விருத்தியை எளிதாக்குவதற்கு மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படைக் கொள்கைகளை ஒரு ஆசிரியர் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை மூன்று (03) எடுத்துக்காட்டுகளை மேற்கோள்காட்டி விவரிக்க.

(10 புள்ளிகள்)

12.

i. 'விசேட கல்வியில் கணிப்பீடு' என்ற எண்ணக்கருவை விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. விசேட கல்வியில் பயன்படுத்தப்படும் மூன்று (03) மாற்றுக் கணிப்பீட்டு (Alternative Assessment) முறைகளை விவரிக்க

(06 புள்ளிகள்)

iii. மிதமான ஆட்டிசம் ஸ்பெக்ரம் கோளாறு (ASD) உள்ள குழந்தைக்கு ஒரு மாற்று கணிப்பீட்டு முறையை விளக்குக. இந்த முறை குழந்தையின் கற்றல் தேவைகள் மற்றும் நடத்தை பண்புகளை எவ்வாறு நிவர்த்தி செய்கிறது என்பதைப் பரீட்சிக்க.

(10 புள்ளிகள்)

13.

i. காக்னேயின் தகவல் செயலாக்க மாதிரியின் (Gagne's Information Processing Mode) முக்கிய கூறுகளை விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாட்டின் போது விசேட தேவைகளைக்கொண்ட குழந்தைகளின் கவனத்தை ஈர்க்க நீங்கள் பயன்படுத்தும் **மூன்று (03)** உத்திகளைப் விவரிக்க.

(06 புள்ளிகள்)

iii. Schunk (2012) கருத்துப்படி 'கற்றல் என்பது நடத்தையில் அல்லது கொடுக்கப்பட்ட பாணியில் நடந்துகொள்ளும் திறனில் ஏற்படும் நீடித்த மாற்றமாகும். இது நடைமுறை அல்லது பிற வகையான அனுபவங்களிலிருந்து விளைகிறது'. **மூன்று (03)** காரணங்களை மேற்கோள் காட்டி இந்தக் கூற்றை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

14.

i. உலகளாவிய விருத்தி தாமதம் (Global Development Delay) (GDD) என்ற சொல்லை ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறையை மேற்கோள் காட்டி விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. உலகளாவிய விருத்தி தாமதம் விசேட தேவைகளைக் கொண்ட குழந்தைகளின் கற்றலை எவ்வாறு பாதிக்கிறது என்பதை **மூன்று** (03) எடுத்துக்காட்டுகளைக்கொண்டு ஆராய்க.

(06 புள்ளிகள்)

iii. உலகளாவிய விருத்தி தாமதம் உள்ள குழந்தைகளின் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறை மேம்பாட்டுக்கு **மூன்று** (03) எடுத்துக்காட்டுகளை வழங்கி லெவ் வைகோட்ஸ்கியின் அறிவாற்றல் கோட்பாட்டின் கொள்கைகளை நீங்கள் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை பரிந்துரைக்க.

(10 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது